2021 Thinakaran and Vaaramanjari epaper -Farooz Salam -faroossalam@gmail.com -0778867131



தினகரன் SLBC Sri Lanka Broadcasting Corporation

இணைந்த கல்விச் சேவை 01.01.2022

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

# தமிழ் தேசிய சேவையில் தரம் 5 புலமைப் பரிசில்



திருமதி தஷ்னி யோகேந்திரன்
ரோயல் கல்லூரி, கொழும்பு 07

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் பகுதி -1

நேரம் : 1 மணித்தியாலம்

➢ **1ஆம் 2 ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்ட வாக்கியங்களுடன் பொருந்தக்கூடிய உருவைத் தெரிவு செய்க.**

1. முக்கனிகளில் ஒன்று. பல வகைகளில் உண்டு. அதிக வித்துக்களைக் கொண்டது.



1. 2. 3.

2. கற்பகதரு என அழைக்கப்படுகிறது. இயற்கையாகவே சுவையான பானத்தைக் கொண்டது. வருமானத்தைப் பெற்றுத்தருவது.



1. 2. 3.

➢ 3,4 ஆம் வினாக்களில் உருக்களை அடிப்படையாகக் கொண்டு சரியான விடையைத் தெரிவு செய்க.



A B C D E

இவ்வுருக்களில் மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை ஒரு கூட்டமாகவும் வகைப்படுத்தலாம் அக்கூட்டத்தைத் தெரிவு செய்க.

1. ACB,DE 2. ACE,BD 3. ABC,DE

4.




A B C D E


1. ABC, DE 2. BCD, EA 3. BDE, AC

➢ **தரப்பட்ட உருக்களுள் வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.**

5.




6.



➢ **7, 8 ஆம் வினாக்களுக்கு தரப்பட்ட உருவிற்குரிய ஒத்த உருவைத் தெரிவு செய்க.**


7.



8.




9. தரப்பட்ட உருவில் காணப்படும் சதுரங்களின் எண்ணிக்கை எத்தனை?



1. 10 2. 8 3. 9

➢ **பாடசாலை ஒன்றில் 40 மாணவர்கள் காலை உணவாக உட்கொள்ள விரும்பும் உணவு வகைகள் தொடர்பான விபரங்களை பின்வரும் வட்டவரைபு காட்டுகின்றது. ஆதன்படி 10,11 வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தெரிவு செய்க.**




10. தோசையை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை 4ஆயின் அப்பத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

1. 7 2. 10 3. 6

11. இடியப்பத்தையும் இட்லியையும் விரும்பும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை

1. 15 2. 18 3. 20


12. CUT, DOG, TEN எனும் சொற்கள் எண்களைப் பயன்படுத்தி பின்வரும் முறையில் காட்போட் அட்டைகள் சொற்களின் ஒழுங்கிற்கேற்ப வகைப்படுத்தப்படவில்லை

349 567 712

அதன்படி DOG எனும் சொல் எழுதப்பட்டுள்ள காட்போட்அட்டை எது?

1. 712 2. 349 3. 567

13. இவ்வுருவில் எண்கள் எழுதப்பட்டுள்ளது ஏதாவதொரு கோலத்திற்கேற்பவாகும். அதன்படி வெற்றுக்கோலத்திற்குப் பொருத்தமான எண்





1. 7 2. 5 3. 2

14. வழுக்குமரம் ஏறும் விளையாட்டு வீரன் ஒருவன் 9m உயரமான கிறிஸ் கம்பத்தில் ஏறி உச்சியைத் தொடுகிறான். அவன் 2m ஏறும் போது 1m சறுக்கி கீழே வருகின்றான் உச்சியைத் தொடும் வரை அவன் எத்தனை தடவை சறுக்கி வருவான்.

1. 1. 7 2. 8 3. 6

➢ ABCDEF எழுதப்பட்ட சதுரமுகி கட்டை ஒன்றில் உள்ள முகங்களின் எதிர்ப்பக்கத்தைத் தெரிவு செய்க.




16. A இன் எதிர்ப்பக்கம் யாது?

1. C 2. D 3. B

17. B இன் எதிர்ப்பக்கம் யாது?


1. F 2. C 3. D

➢ முதலில் உள்ள இரு உருக்களையும் சேர்க்கும் போது பெறப்படும் சரியான உருவம் எது

18.



19.



➢ எழுத்துப்பிழைகள் இல்லாத வாக்கியத்தைத் தெரிவு செய்க.

20. 1. தொழிலாளர்கள் தொழிற்சாலையில் வேளை செய்தார்கள்.
2. தொழிலாழர்கள் தொழில்சாலையில் வேலை செய்தார்கள்.
3. தொழிலாளர்கள் தொழிற்சாலையில் வேலை செய்தார்கள்.

21. 1. தம்பி சவர்காரம் வேண்டி வந்தான்.
2. தம்பி சவர்க்காரம் வாங்கி வந்தான்.
3. தம்பி சவற்காரம் வாங்கி வந்தான்.

➢ பின்வரும் வாக்கியங்கள் கருத்துள்ளவையாக இருப்பதற்குச் செய்ய வேண்டிய மாற்றத்தைத் தெரிவு செய்க.

22. வண்ணத்துப்பூச்சி ரோஜா மலரில் நீரைக் குடிக்கிறது.
1. வண்ணத்துப்பூச்சி என்பதற்குப் பதிலாக குளவி என இடுதல்.
2. ரோஜா என்பதற்குப் பதிலாக தாமரை என இடுதல்.
3. நீரை என்பதற்குப் பதிலாக தேனை என மாற்றுதல்.

23. விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பதன் கருத்து
1. பயிர் நன்றாக வளரநல்ல விதை தேவை
2. ஒருவனின் சிறுவயதுப் பழக்கங்களை வைத்து அவனைப்பற்றி மதிப்பிடலாம்.
3. பெரியவர்களாக வளர்வதற்குச் சிறியவர்களுக்கு உதவுதல் வேண்டும்.

➢ ஒரு வியாபாரி ரூ , 462.70 , ரூ. 985.30 , ரூ. 176.50 பெறுமதியான பொருட்களை HKB.YM , CAN.DM , LYK.NM என எழுதி இருந்தார். இதற்கமைய பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

24. மேலங்கி ஒன்றின்விலை HML.AM எனக் குறித்திருந்தார். இதன் பெறுமானம் யாது?

1. ரூ. 401.00 2. ரூ. 401.90 3. ரூ. 401.09

25. ரூ. 876.50 பெறுமதியான காற்சட்டையின் விலைக்குறியீடு யாது?

1. CYK. NM 2. KYC.MN 3. CKY.NM

(10ஆம் பக்கம் பார்க்க)

2021 Thinakaran and Vaaramanjari epaper -Farooz Salam -farooszsalam@gmail.com -0778867131



தினகரன் THINAKARAN
SLBC Sri Lanka Broadcasting Corporation
இணைந்த கல்விச் சேவை
இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

# தமிழ் தேசிய சேவையில் தரம் 5 புலமைப் பரிசில்



திருமதி தஷ்னி யோகேந்திரன்
ரோயல் கல்லூரி, கொழும்பு 07

(09ஆம் பக்கத் தொடர்)

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் பகுதி -1


நேரம் : 1 மணித்தியாலம்

26. பின்வரும் விழாக்கள் கொண்டாடப்படுவதைக் கால எண்ணிக்கையின் அடிப்படையில் ஒழுங்குபடுத்துக.

A – பொன்விழா B – அமுதவிழா C – வெள்ளிவிழா
D – வைரவிழா


1. DBCA 2. BCAD 3. CADB

27. பின்வரும் திண்மவடிவங்களின் முகங்களின் எண்ணிக்கை அடிப்படையில் உருவங்களை ஏறுவரிசை ஒழுங்கில் அடுக்கினால் வரும் ஒழுங்கு யாது?




1. PQRS 2. QPSR 3. SQRP

➢ கீழுள்ள தரவுகளை அவதானித்து வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.





28. கட்டத்திற்குள் தரப்பட்டுள்ளவற்றுள் விலை கூடிய பழம் எது?
1. மாம்பழம் 2. அன்னாசிப்பழம் 3. பப்பாசிப்பழம்


29. அன்னாசிப்பழம் நான்கு வாங்கும் பணத்திற்கு எத்தனை அப்பிள்பழம் வாங்கலாம்
1. 5 2. 4 3. 6

➢ பின்வருவனவற்றில் முதலாவது படத்தில் தரப்பட்டதை முகம் பார்க்கும் கண்ணாடியில் தோன்றும் விதத்தை மூன்று விடைகளில் இருந்து தெரிவு செய்க.

30.




31.




32. இருபகுதிகளிலும் சமனாக இருக்கும் நிரையைத் தெரிவு செய்க.

1. AD2345F96HBB - AD2345F96HBB
2. B489PRQS157K - B498PRQS157K
3. ECV874XYZ765 - ECV847XYZ765

33. | அ 2 A C 3 இ ஈ C K மு V எ ப Z 9 6 1 |

அதிகமாக உள்ளவை எவை?
1. இலக்கங்கள் 2. எழுத்துக்கள் 3. ஆங்கிலஎழுத்துக்கள்

34. கீழ்க்காணும் பிரசினங்களில் கூட்டிலுள்ள இரண்டு எண்களுக்குப் பதிலாக இடக்கூடிய எண் கூட்டினைத் தெரிவு செய்க.

12 + [19 +30] = 61


1. [53 - 5] 2. [53 - 6] 3. [53 - 4]

35. இப்போது எனது வயது 11 ஆண்டுகள் ஆகும். எனது தம்பியின் வயது 4 ஆண்டுகள் ஆகும். இன்னும் எத்தனை வருடங்களில் எனது வயது தம்பியின் வயதின் இரு மடங்காகும்.
1. 4 2. 3 3. 5

36. ஒரு வீட்டில் தொலைக்காட்சி பிற்பகல் 1.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.15 மணி வரையும் கணினி பிற்பகல் 2.15 தொடக்கம் 3.30 வரையும் மின்விசிறி 2.30 தொடக்கம் 3.45 வரைக்கும் தொழிற்பட்டன. எனின் மூன்று உபகரணங்களும் ஒரே வேளையில் தொழிற்பட்ட நேரம் யாது?
1. 45 நிமிடம் 2. 35 நிமிடம் 3. 40 நிமிடம்


37. அக்ஷயன் மாலையில் மைதானத்திற்குச் செல்லும் போது அவனது நிழல் அவனுக்கு இடப்பக்கமாக விழுந்தது எனின் அக்ஷயன் செல்லும் திசை யாது?
1. கிழக்கு 2. மேற்கு 3. தெற்கு

38.




1. 6 2. 3 3. 18

➢ படத்தில் காட்டியவாறு பிள்ளை ஒன்று வீட்டிலிருந்து பாடசாலை சென்ற பாதையை படம் காட்டுகிறது.



39. பிள்ளை வலது , இடது பக்கங்கள் திரும்பிய தடவைகள் எத்தனை?
1. 4 , 4 2. 3 , 3 3. 4 , 5

40. பிள்ளை கிழக்குத்திசைக்கும் தெற்குத்திசைக்கும் சென்ற தடவைகள் எத்தனை?
1. 4, 2 2. 4,3 3. 5,2

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் பகுதி-2

➢ **பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**
இயற்கையைப் பேணிப்பாதுகாப்பதற்கு மனிதர்கள் ஒத்துழைப்பதில்லை. இவ்வாறான செயல்களால் எமது இருப்பிடத்தை விட்டு நாம் விரட்டப்பட்டுள்ளோம். பூக்களைத் தேடி நீண்டதூரம் பயணிக்கின்றோம். உணவிற்காக வாழ்நாள் முழுவதும் அங்குமிங்கும் அலைகின்றோம். அதனால் எமது வாழ்க்கை மிகவும் கடினமானதாகிவிட்டது.

**01. கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை பந்தியிலிருந்து தேர்ந்தெடுத்துப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**
1. பந்தியிலுள்ள உயர்திணைச் சொல் எது?..........
2. மலர்களை என்பதன் ஒத்தசொல் யாது?..........
3. பந்தியிலுள்ள தன்மை ஒருமைச்சொல் எது?..........
4. செயற்கை என்பதன் எதிர்ச்சொல் என்ன?..........
5. உயர்திணை பன்மை நிகழ்கால வினைச்சொல் ஒன்றை எழுதுக?..........
6. பந்தியிலுள்ள இணைமொழிச்சொல்லை எழுதுக?..........

(1x6=6புள்ளிகள்)

**02. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.**

1. மாறன் ..........( சுத்தவாளி / சுற்றவாளி) எனப் பதிலளித்தான்.
2. எமக்கு நுளம்பு குத்துவதனால் டெங்குக் ..........
( காய்ச்சல் / காச்சல்) ஏற்படுத்துகின்றது.
3. தரம் நான்கில் ..........( முன்னூறு / முந்நூறு) மாணவர்கள் உள்ளனர்.

**03. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**
1. விழித்தெழு பாடலைப்பாடியவர்..........ஆவார்.
( மு. நல்லதம்பிப்புலவர் , செல்லக்கணபதி, அழ.வள்ளியப்பா)
2. அப்பா என்ற சொல்லில் உள்ள எழுத்து 'பா' ..........ஆகும்.
( உயிரெழுத்து , உயிர்மெய்யெழுத்து , மெய்யெழுத்து)
3. கொடைக்குச் சிறந்தவன் என அழைக்கப்படும் மன்னன்..........
ஆவான். ( துரியோதனன் , கர்ணன் , தருமன்)

04. **"கிடைக்கும் பழங்களையெல்லாம் தின்று அவற்றில் உள்ள விதைகளைக் காடெல்லாம் பரப்புங்கள்" என்றது சிங்கம். இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது.**

யாரால் .......... யாருக்கு ..........

05. இப்பாடலில் உள்ள அடுக்குத்தொடரை எழுதுக.

சாரை சாரையாகவே
சலித்திடாமல் எறும்புகள்
ஓரமாகச் சென்றுமே
உழைத்துத் தின்னும் அழகு பார்!

..........

**06. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.**

| சொல் | திணை | பால் | எண் | இடம் | காலம் |
|---|---|---|---|---|---|
| பெய்கிறது | அஃறிணை | .......... | ஒருமை | .......... | நிகழ்காலம் |
| ஓடினோம் | .......... | பலர்பால் | பன்மை | தன்மை | .......... |

**07. பின்வரும் வாக்கியங்களில் கோடிடப்பட்டு இருக்கும் சொல்லின் கருத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**
1. வளர்ந்த பின்னர் <u>வாலிபத்தை</u> அடையலாம்..........

**08. பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிந்து கோடிடுக.**
1. அவர்களிருவரும் காட்டு வழியே பயணம் சென்று..........
( கொண்டிருந்தார் , கொண்டிருந்தார்கள் )

2. கணினியின் வருகையால் மனிதர்களுடைய வேலைச்சுமை ..........
( குறைக்கப்படுகின்றன , குறைக்கப்படுகிறது )

3. நாங்கள் அனைவரும் ஆசனங்களில் அமர்ந்து..........
( கொண்டோம் , கொண்டேன் )

**09. தரப்பட்ட சொற்களை ஒழுங்குபடுத்தி சரியான வாக்கியமாக எழுதுக.**
கற்றுக் / கோபத்தை / வாழலாம் / கொண்டால் / கட்டுப்படுத்தக் / சிறப்பாக
..........

**10. தரப்பட்ட வாக்கியத்திலுள்ள மரபுத்தொடர்களை இனங்கண்டு அதற்கான கருத்தை எழுதுக.**
அபி தன்னுடைய பொருட்களில் கண்ணாயிருப்பாள்.
..........

(11ஆம் பக்கம் பார்க்க)

2021 Thinakaran and Vaaramanjari epaper -Farooz Salam -faroossalam@gmail.com -0778867131



தினகரன்
SLBC Sri Lanka Broadcasting Corporation
இணைந்த கல்விச் சேவை

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

# தமிழ் தேசிய சேவையில் தரம் 5 புலமைப் பரிசில்





திருமதி தஷ்னி யோகேந்திரன்
ரோயல் கல்லூரி, கொழும்பு 07

(10ஆம் பக்கத் தொடர்)

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் பகுதி-2

11. சரியான விடையை எழுதுக.
   1. முனிவர்கள் வாழும் இடம் ..........................................
   2. அரண்மனையில் பெண்கள் வசிக்கும் இடம்..........................

12. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

1. 
...............................

2. 
...............................

13. பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.
   1. That / a / calendar / is ..................................................................................
   2. Help / I / can / you ..................................................................................\

14. அம்ப கச எனும்சிங்களச் சொல்லுக்கு உரிய தமிழ் கருத்தை எழுதுக.
..................................................

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தழிழில் எழுதுக.
துள்ளிப் பாயுங்கள் ..........................................


16. நாற்பத்து நான்காயிரத்து அறுபத்து எட்டு எனும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.
............................................................

| | | |
|---|---|---|
| 9 | | |
| | 0 | |
| | 2 | 8 |


17. கட்டத்தில் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகச்சிறிய எண்ணை எழுதுக?
..................................................

17. பின்வரும் எண்களுள் 6 எனும் இலக்கத்தினால் காட்டப்படும் பெறுமதி 60 ஆகவுள்ள எண் யாது?
8640 , 7028 , 8760 , 1476 ......................................

18. கீழே உருவில் காட்டப்பட்டுள்ள பென்சிலின் நீளம் எவ்வளவு? ..........................




19. இவ்வுருவில் உள்ள சமச்சீர் கோடுகளை வரைக.



20. தோட்டமொன்றில் நான்கு நாட்கள் பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| நாட்கள் | செங்கறகளின் எண்ணிக்கை |
|---|---|
| திங்கட்கிழமை | 2124 |
| செவ்வாய்க்கிழமை | 3468 |
| புதன்கிழமை | 4137 |
| வியாழக்கிழமை | 1963 |

   1. திங்கட்கிழமை , செவ்வாய்க்கிழமை ஆகிய இரு தினங்களிலும் விற்கப்பட்ட தேங்காய்கள் எத்தனை? ......................................
   2. வியாழக்கிழமையை விட புதன்கிழமை எத்தனை தேங்காய்கள் கூடுதலாக பறிக்கப்பட்டுள்ளன. ......................................

21. பிற்பகல் 5.30 என்பது இருபத்து நான்கு மணித்தியாலய கடிகாரத்தில் காட்டப்படும் விதத்தை இலக்கத்தில் எழுதுக. ......................................

22. 2kg 500g கடலையை ஒரு பையில் 250g வீதம் எத்தனை பைகளில் இடலாம்?


23. ஒன்றின் விலை ரூபாய் 42.00 வீதம் 5 அப்பியாசப் புத்தகங்களை வாங்கிக்கொண்டு ரூபாய் 500.00 நாணயத்தாளொன்றை கொடுத்தால் மீதியாக கிடைக்கும் பணம் எவ்வளவு? ......................................

24. சங்கர் ஓர் இடத்திலிருந்து வடக்குத் திசையாக 5m சென்று அவனது வலதுகைப்பக்கமாக திரும்பி மேலும் 5m சென்றான். அவ்விடத்திலிருந்து மேற்குத் திசையில் 5m சென்றான் எனின் அவன் இப்போது பயணத்தை ஆரம்பித்த இடத்தில் இருந்து எந்த திசையில் உள்ளான்? ......................................


25. 416 கேக் துண்டுகள் ஒரு பெட்டியில் நான்கு துண்டுகள் வீதம் பெட்டிகளில் இடப்பட்டன. கேக் துண்டுகள் இடப்பட்ட பெட்டிகள் எத்தனை? ......................

26. 14l நிரப்பக்கூடிய தொட்டியொன்றில் ¼ பகுதி வரை நீர் ஊற்றப்பட்டுள்ளது. அத் தொட்டியை முழுமையாக நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீர் தேவை?......................

27. சதுர சென்ரிமீற்றர் சதுரக்கட்ட அமைப்பொன்று படத்தில் காட்டப்பட்டுள்ளது. அதில் நிழற்றியுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர்? ......................



28. மாணவர் குழுவொன்று அதிகம் வருகை தரும் வாகனவகைகள் வரைபில் தரப்பட்டுள்ளன.




   1. காரில் வருபவர்களின் எண்ணிக்கை நடந்து வருபவர்களின் எண்ணிக்கையை விட எவ்வளவு கூடுதலானது? ......................................
   2. குழுவில் உள்ள மொத்த மாணவர் தொகை எவ்வளவு? ............................

❖ 30 தொடக்கம் 59 வரையான ஒவ்வொரு வினாவிற்கும்தரப்பட்ட விடையைத் தெரிவு செய்து கோடிடுக.

30. உள்ளத்தை இதப்படுத்தும் செயற்பாடுகளின் படிநிலைகளைச் சரியாகக் காட்டும் விடை
   1. உடலைத்தளர்த்துதல் , உள்ளத்தைத்தளர்த்துதல் , மனவுறுதி, பிரார்த்தனை, உதிர்ப்பு
   2. உடலைத்தளர்த்துதல் , மனதைத்தளர்த்துதல் , மலர்வு , பிரார்த்தனை , திடசித்தம்
   3. உள்ளத்தைத்தளர்த்துதல் , உடலைத்தளர்த்துதல் , திடசித்தம் , பிரார்த்தனை , மலர்வு

31. சமூக விரோதச்செயல்களை கண்டுபிடித்து அதற்கான தீர்வை பெற்றுத்தரும் அரச நிறுவனம்
   1. தபால்நிலையம் 2. பிரதேச செயலகம் 3. பொலிஸ்நிலையம்

32. எமது நாட்டின் தேசிய கீதத்தை ஆக்கியவர்
   1. முத்தமிழ் புலவர் மு. நல்லதம்பி
   2. ஆனந்த சமரகோன்
   3. C.w.w கன்னங்கரா

33. சுதந்திர இலங்கையின் முதலாவது சுதந்திரதின உரையை நிகழ்த்திய பெருமைக்கு உரியவர்
   1. டீ. எஸ் சேனாநாயக்க
   2. எஸ்.டபிள்யூ.ஆர்.டீ பண்டாரநாயக்கா
   3. ரணசிங்கபிரேமதாச

34. புற்கள் வளர்ந்துள்ள தரை ஒன்றில் காணப்பட்ட மரப்பலகையைத் தூக்கிய போது பலகையின் கீழ் காணப்பட்ட புற்கள் மஞ்சள் நிறமாகக் காணப்பட்டன. இதற்குக் காரணமாக அமைவது
   1. நீர் போதாமை
   2. சூரியஒளி கிடைக்காமை
   3. பசளை இடப்படாமை

35. பூக்களில் அமுதம்பருக வரும் பிராணிகளின் கூட்டம் அல்லாதது
   1. தேனீ , வண்ணத்துப்பூச்சி , தேன்சிட்டு
   2. வண்டு , அணில் , தேனீ
   3. நத்தை , மயிர்க்கொட்டி , செவ்வெறும்பு

36. மிக நுட்பமான கூடுகளை அமைக்கும் விசேட ஆற்றல் கொண்ட பிராணிகளாவன
   1. சிட்டுக்குருவி , தேன்குருவி
   2. தச்சன்குருவி , தூக்கணாங்குருவி
   3. காகம் , கொக்கு

37. ஊன்உண்ணிகள் , தாவரஉண்ணிகள் , அனைத்தும்உண்ணிகள் என மூவகைப் பிராணிகளும் வாழ்வதனால் சூழலுக்கு கிடைக்கும் நன்மை
   1. அதிகளவு பிராணிகள் வாழும்.
   2. சூழல் அழகாக இருக்கும்.
   3. சூழல் சமநிலை பேணப்படும்.

38. தச்சன் கதவில் சிற்பங்களைச் செதுக்குவதற்கு பயன்படுத்தும் உபகரணம்

1. 
2. 
3. 

39. இலங்கையில் உற்பத்திசெய்யப்பட்ட பொருட்களுக்கு தரச்சான்றிதழை வழங்குவது,
   1. பொதுச்சுகாதாரப்பரிசோதகர் அலுவலகம்
   2. நுகர்வோர் அதிகாரசபை
   3. இலங்கை கட்டளைகள் பணியகம்

40. எமது உடலுக்குத்தீங்கு ஏற்படாத வகையில் நாம் அருந்த வேண்டிய பாணவகை
   1. போத்தலில் அடைக்கப்பட்ட குளிர்பானங்கள்
   2. வீட்டில் தூய்மையான பழங்களில் தயாரிக்கப்படும் பானங்கள்
   3. பைக்கற்றுக்களில் அடைக்கப்பட்ட பானங்கள்.

41. நீரிழிவு நோயாளர்கள் உண்ணும் உணவில் விலக்கிக் கொள்ள வேண்டிய உணவுப் பொருள்
   1. கீரைவகை 2. வாழைப்பூ 3. வற்றாளைக்கிழங்கு

42. திடீரென தீப்பற்றிக்கொண்ட ஒருவருக்கு உடனடியாகச் செய்ய வேண்டியது
   1. விரைவாக ஓடுவதற்கு ஆலோசனை வழங்கல்.
   2. நிலத்தில் விழுந்து புரளுமாறு ஆலோசனை வழங்கல்.
   3. ஈரமான சாக்கினால் போர்த்திவிடுதல்.

43. மனிதரிலிருந்து மனிதருக்கு பரவிக்கொள்ளும் நோய் அல்லாதது
   1. இதயநோய் 2. சின்னமுத்து 3. கொப்பளிப்பான்

(12ஆம் பக்கம் பார்க்க)

2021 Thinakaran and Vaaramanjari epaper -Farooz Salam -faroossalam@gmail.com -0778867131



தினகரன் THINAKARAN

SLBC Sri Lanka Broadcasting Corporation

இணைந்த கல்விச் சேவை

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

# தமிழ் தேசிய சேவையில் தரம் 5 புலமைப் பரிசில்



திருமதி தஷ்னி யோகேந்திரன்
ரோயல் கல்லூரி, கொழும்பு 07

(11ஆம் பக்கத் தொடர்)

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் பகுதி-2

44. பனிக்கட்டியை நீண்டநேரம் உருகாது பேணுவதற்காகச் செய்யக்கூடிய முறை அல்லாதது
    1. நன்கு காற்றுப்படக் கூடிய இடத்தில் வைத்தல்.
    2. மேலே மரத்தூளைப் பரவி மூடி வைத்தல்.
    3. மேலே உமியைப்பரவி வைத்தல்.

45. சமஅளவான சிறிய துவாரங்கள் இடப்பட்ட இப்பாத்திரத்தில் இருந்து வெளிப்படும் நீர் கூடிய அளவு தூரத்திற்கு வெளியேற்றும் துவாரம்

    1. A 2. B 3. C

46. வாகனங்களில் பயணிக்கும் போது ஒலிஎழுப்பத்தடை செய்யப்பட்ட இடங்கள்
    1. பாடசாலை , ஆலயம்
    2. நீதிமன்றம் , வைத்தியசாலை
    3. பல்பொருள்அங்காடி , சந்தை

47. இலை மூலம் கன்றுகளை பெறும்தாவரம் எது?
    1. மல்லிகை 2. மரவள்ளி 3. சதைகரைச்சான்

48. எமது உடலுக்கு வளர்ச்சிதரும் உணவு
    1. புரதஉணவுகள் 2. மாப்பொருள்உணவுகள் 3. கொழுப்புஉணவுகள்

49. சுவரோவியங்களுக்கு பிரசித்திபெற்ற மாகாணம்
    1. வடமாகாணம் 2. வடமத்தியமாகாணம் 3. வடமேல்மாகாணம்

50. துன்கிந்த , படகமுவ என்பன முறையே
    1. ஒரு நீர்வீழ்ச்சியும் ஒரு காடும்
    2. ஒருமலையும் ஒருகுளமும்
    3. ஒரு நீர்வீழ்ச்சியும் ஒரு மலையும்

51. நீரில் வினாகிரியை இட்டால் யாது நிகழும்
    1. நீர் வெள்ளையாகும்
    2. நீர் மஞ்சலாகும்.
    3. நீரில் மாற்றம் ஏற்படாது.

52. நாட்டு மக்களின் தேவைகளை எந்தவேளையிலும் அறிவிப்பதற்காக ஒழுங்குகளைச் செய்து ஆராய்ச்சிமணியைத் தொங்க விட்ட மன்னன்
    1. துட்டகைமுனு 2. எல்லாளன் 3. பண்டுகாபயன்

53. வானொலி கேட்பதால் எமக்குக் கிடைக்கும் நன்மை அல்லாதது

    1. விருப்பமான அலை வரிசைகளைத் தெரிவு செய்து கொள்ள முடியும்.
    2. மிதமிஞ்சிய ஒலிசெவிப்பறையில் பாதிப்பை ஏற்படுத்துதல்.
    3. செவி வழியாகச் செய்திகளை அறிந்து கொள்ள முடியும்.

54. தகவல் பெறும் ஊடகங்களில் அச்சு ஊடகமும் இலத்திரனியல் ஊடகமும் முறையே

    1. வானொலி, நூல்கள்
    2. கணினி , தொலைபேசி
    3. துண்டுபிரசுரங்கள் , மின்னஞ்சல்

55. எமது முன்னோர்கள் பயன்படுத்திய எமது பண்பாட்டில் இருந்து அருகிப்போயுள்ள பண்டைய பெறுமதி அல்லாதது

    1. பின்னல்முறைகள் 2. மின்சார உபகரணங்கள் 3. சுதேசவைத்தியமுறைகள்

**56. இலங்கையிலுள்ள இயற்கைத்துறைமுகம் எது?**
    **1. காலித்துறைமுகம் 2. கொழும்புத்துறைமுகம் 3. திருகோணமலைத்துறைமுகம்**

**57. E01 என்பது குறிக்கும் பாதை**
    **1. அதிவேகப்பாதை 2. பெருந்தெரு 3. புகையிரதப்பாதை**

**58. ஆனைகட்டி ஏலேலப்படி சேர்ந்துழப்பி...... எனும் பாடல் எவ்வகைப்பாடலாகும்.**

    **1. மீனவர்பாடல் 2. சேனைப்பாடல் 3. விவசாயப்பாடல்**

59. பயிர்ச்செய்கைக்கு பாதகம் செய்யும் பிராணிகள்
    1. மண்புழு , ஆந்தை
    2. தண்டுகோதி , தேனீ
    3. நத்தை , மயிர்க்கொட்டி

60. கிராமிய விளையாட்டுக்களினால் கிடைக்கும் நன்மைகள் எனும் தலைப்பில் மூன்று வாக்கியம் எழுதுக.

    1. ………………………………………………………………………………..
    ………………………………………………………………………………
    2. ………………………………………………………………………………
    ………………………………………………………………………………
    3. ………………………………………………………………………………
    ………………………………………………………………………………

## சூழலில் நாம் காணும் தாவரங்கள்


மஞ்சள்


ஆடாதோடை


எலுமிச்சை


வல்லாரை


அத்தி


வேம்பு


அலரி


தொட்டாச்சுருங்கி


பொன்னாவரை


சாத்தாவாரி


கறிவேப்பிலை


கற்றாளை


மருது


ஆமணக்கு


அகத்தி


கண்டங்கத்தரி

## இலங்கையின் புராதன வழிபாட்டுத் தலங்கள்


ருவான்வெலிசாய


தூபாராம


லங்காதிலக விகாரை


தலதாமாளிகை

IQ CENTRE

More Papers : IQ CENTRE, Kinniya, 0778867131